செ.வெ.எண்:27 நாள்:18.06.2018

## நீடித்த நிலையான மானாவாரி மேம்பாட்டுத்திட்டத்தில் கோடை உழவிற்கு மானியம் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

அரியலூர் மாவட்டத்தில் சராசரியாக ஆண்டு தோறும் 1,05,000 எக்டேரில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இவற்றில் 38000 எக்டேர் பாசன வசதியுடனும், மீதமுள்ள 67,000 எக்டேர் மானாவாரிப் பயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது. அரியலூர் மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழையளவு 954 மில்லி மீட்டர் ஆகும். கோடைகாலத்தில் சராசரியாக 83 மில்லி மீட்டர் மழையளவு பெறப்படுகிறது.

தற்சமயம் அரியலூர் மாவட்டம் முழுவதும் கோடை மழை பரவலாக பெய்து வருகிறது. விவசாயிகள் இம்மழையினை பயன்படுத்தி கோடை உழவு செய்யலாம். கோடை உழவு செய்வதினால் பின்வரும் பயன்களைப் பெறலாம்.

கோடை உழவு செய்வதினால் மண்ணின் மேற்பரப்பில் உள்ள கடினப்பகுதி உடைக்கப்பட்டு, மண்ணின் நீர் பிடிப்புத் தன்மை அதிகரிக்கரிக்கிறது. மேலும் நிலத்தடி நீர்மட்டம் உயர ஏதுவாகிறது.

கோடை உழவு செய்வதினால், மண்ணானது ஈரமும் மற்றும் காய்ச்சலுமாக இருப்பதினால் மண்ணின் அமைப்பு மேம்படுத்தப்படுகிறது.

கோடை உழவு செய்த வயலில், அங்கக மற்றும் தொழு உரம் இடுவதினால் மண்ணில் நுண்ணுயிர்கள் எண்ணிக்கை பல்கி பெருகி மண்ணின் வளம் மேம்படுத்தப்படுகிறது.

கோடை உழவு செய்வதினால் களைக்கொல்லி மற்றும் பூச்சிக்கொல்லிகளின் எஞ்சிய நஞ்சு சிதைவுற்று மண்ணிற்கு பாதிப்பில்லாமல் பாதுகாக்கப்படுகிறது.

கோடை மழை, வளி மண்டலத்திலுள்ள வளிமண்டல நைட்ரேட்டுடன் இணைந்து பெறப்படுவதினால் மண்ணின் வளம் மேம்படுத்தப்படுகிறது.

கோடை உழவு செய்யும் போது, மண்ணில் உள்ள பூச்சிகள், கூட்டுப் புழுக்கள், அவற்றின் முட்டைகள், பூஞ்சாணம் மற்றும் நோய் பரப்பக் கூடிய பாக்டீரியாக்கள், நூல் புழுக்கள் இவை அனைத்தும் முழுமையாக மண்ணின் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுகிறது.

கோடை உழவின் போது பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய களைகள், அவற்றின் விதைகள் முழுவதுமாக மக்கி மண்ணிற்கு உரமாக மாற்றப்படுகிறது.

செங்குத்து மற்றும் சரிவாக உள்ள வயல்களில் குறுக்கும் நெடுக்குமாக கோடை உழவு செய்வதால் மண் அரிமானம் தடுக்கப்பட்டு மண்ணின் வளம் பாதுகாக்கப்படுகிறது.

மேற்கண்ட நன்மைகளை உடைய கோடை உழவை ஊக்கப்படுத்தும் விதமாக நீடித்த நிலையான மானாவாரி மேம்பாட்டுத்திட்டத்தில், கோடை உழவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.500/- பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டம், அரியலூர் வட்டாரத்தில் கடுகூர், அயன்ஆத்தூர், இடையத்தாங்குடி, சிறுவலூர் ஆகிய கிராமங்களிலும், செந்துறை வட்டாரத்தில் நமங்குணம், நக்கம்பாடி, குழுமூர், வஞ்சினாபுரம் ஆகிய கிராமங்களிலும், திருமானூர் வட்டாரத்தில் கீழப்பழூர், பூண்டி, சன்னாவூர் கிராமங்களிலும், ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் வானதிரையன்பட்டிணம், இடையார், தேவாமங்கலம் ஆகிய கிராமங்களிலும், ஆண்டிமடம் வட்டாரத்தில் ஆண்டிமடம், விளந்தை, கவரப்பாளையம், வரதராஜன்பேட்டை, கூவத்தூர், பெரிய கிரு'ணாபுரம், அழகாபுரம், ஸ்ரீராமன், ராங்கியம், ஓலையூர், ஆத்துக்குறிச்சி, விழுதுடையான், நாகம்பந்தல், பெரியாக்குறிச்சி ஆகிய கிராமங்களிலும், தா.பழூர் வட்டாரத்தில் சுத்தமல்லி, வெண்மான்கொண்டான் (கி) மற்றும் (மே), கடம்பூர், குணமங்கலம், கீழநத்தம், உடையவர்த்தியனூர் ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட 35 கிராமங்களில் செயல்படுத்தப்படுகிறது.

விவசாயிகள் கோடை உழவு செய்து பின்னேற்பு மானியம் பெற தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரை தொடர்பு கொண்டு, விண்ணப்பம் அளித்து, ஏக்கர் ஒன்றிற்கு ரூ.500/-ஐ பின்னேற்பு மானியமாக பெற்று, பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**